**செய்தி வெளியீடு எண் : 1954** **நாள் : 07.11.2022**

## <u>செய்தி வெளியீடு</u>

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளுக்கு கூடுதலாக 50,000 மின் இணைப்புகள் வழங்கும் திட்டம் துவக்க விழா தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் விவசாயிகளுக்கு கூடுதலாக 50,000 மின் இணைப்புகள் வழங்கும் திட்ட துவக்க விழா தொடர்பான ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி.செந்தில் பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (07.11.2022) சென்னை, தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் காணொளி காட்சி வாயிலாக நடைபெற்றது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ,ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் மற்றும் உயர் அலுவலர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில் ஐந்து மண்டல தலைமைப் பொறியாளர்கள், 14 மின் பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் காணொளி காட்சி மூலம் கலந்து கொண்டனர். இந்த ஆய்வுக் கூட்டத்தின் போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம் திரு.மா.சிவலிங்கராஜன் அவர்கள், தலைமை அலுவலக தலைமைப் பொறியாளர்கள், மற்றும் உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

கடந்த ஆண்டில், தமிழ்நாட்டில் இதுவரை இல்லாத சரித்திர சாதனையாக ஓர் ஆண்டில் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படும் என்று எரிசக்தி துறையின் 2021–2022 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் திருக்கரங்களினால் கடந்த ஆண்டு 23.09.2021 அன்று துவக்கி

வைக்கப்பட்டது. மற்றொரு சாதனையாக, இந்த திட்டம் துவக்கி வைக்கப்பட்ட ஆறு மாத காலத்திற்குள் ஒரு இலட்சம் விவசாயிகளுக்கும் விவசாய மின் இணைப்பு தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தினால் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, எரிசக்தி துறையின் 2022–2023 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில், தமிழ்நாட்டில் மேலும் விவசாய உற்பத்தியினை பெருக்கும் பொருட்டும், விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடனும் 50,000 புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் வருகின்ற 11.11.2022 அன்று காலை 10 மணிக்கு கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி, தடா கோவில் பகுதியில் துவக்கி வைக்க உள்ளார்கள்.

இந்த திட்டத்தினை தமிழ்நாட்டில் விரைந்து செயல்படுத்தி 50,000 விவசாயிகளுக்கும் குறுகிய காலத்தில் மின் இணைப்பு வழங்குவது பற்றி இந்த ஆலோசனைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தின் முடிவில், மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் குறுகிய காலத்திற்குள் 50,000 விவசாயிகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட வேண்டும் என்று அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுறுத்தினார். மேலும், மின் இணைப்பு வழங்குவதற்கு தேவைப்படும் அனைத்து தளவாட சாமான்களையும் முன்கூட்டியே கணக்கிட்டு இந்தத் திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

**பின்னர், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,**

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க 2021–22ஆம் ஆண்டு மின்சார துறையினுடைய மானிய கோரிக்கையில் 1,00,000 விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் மின் இணைப்பு வழங்குவதற்கான ஆணைகளை வழங்கி ஓராண்டில் 1,00,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு என்ற மிகப் பெரிய

வரலாற்று சிறப்பு மிக்க அந்த பணிகளை 06 மாதங்களில் நிறைவு செய்து இதே அரங்கத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 1,00,000மாவது விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்புப்புகான உத்தரவை மாண்புமிகு முதலமைச்சர் வழங்கினார்கள்.

அதன் தொடர்ச்சியாக, 2022–23ஆம் ஆண்டில் 50,000 விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்ற மகத்தான அறிவிப்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டன. சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட 50,000 விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு வழங்கக்கூடிய சிறப்பு வாய்ந்த இத்திட்டத்தை வருகின்ற 11.11.2022 அன்று கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி, தடாகோவில் பகுதியில் காலை 10.00 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் தளபதி அவர்களின் திருக்கரங்களால் தொடங்கி வைக்கின்றார்கள்.

ஏற்கனவே, 1,00,000 விவசாயிகளுக்கான மின் இணைப்பு, தற்போது 50,000 விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பு ஆக மொத்தம் 1,50,000 விவசாயிகளுக்கான இலவச மின் இணைப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நல்லாசியோடு ஆணைக்கிணங்க விவசாயிகளுக்கு வழங்கி ஒரு மகத்தான சாதனையை மின்சார வாரியம் நிகழ்த்தி வருகிறது.

தேர்தல் நேரங்களில் கொடுக்கப்பட்ட வாக்குறுதி என்னவெனில் ஏற்கனவே, பதிவு செய்து இலவச மின் இணைப்பிற்காக காத்திருக்கக்கூடிய விவசாயிகள் அனைவருக்கும் இலவச மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த வாக்குறுதியை நிறைவேற்றக்கூடிய வகையில் ஏறத்தாழ 4,50,000ற்கும் மேலான விவசாயிகள் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். அந்த காத்திருக்கும் விவசாயிகளில் முதலாம் ஆண்டு 1,00,000 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 50,000 விவசாயிகளுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டு அவர்களுக்கு மின் இணைப்பு வழங்கக்கூடிய பணி வருகின்ற 11.11.2022ஆம் தேதி துவக்கி வைக்கப்பட இருக்கிறது. அன்றைய நிகழ்ச்சியில் கரூர், நாமக்கல், திண்டுக்கல் மற்றும் திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஏறத்தாழ 20,000 விவசாயிகளுக்கான உத்தரவு அந்த அரங்கத்தில்

கலந்துகொண்டு பெற இருக்கிறார்கள். மீதம் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு படிப்படியாக ஆணைகள் முன்னுரிமையின் அடிப்படையில் வழங்கப்படும். மின் நீட்டிப்பு பணிகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலக் கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும் என இந்த ஆய்வு கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் பேசினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வரும் 24 மணி நேர நுகர்வோர் மின் சேவை மையமான மின்னகத்தை ஆய்வு செய்தார்கள்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in